அதன் பிறகு நாங்கள் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தும், கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தும் வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

THIRU G. VASANTHA PAI : Sir, the question refers to the quantity received from the Government of India and its availability in each of the coming months from March to June.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதைத் தான் ஏற்கெனவே படித்தேன்.

Recommendations made at the conference of Transport Ministers of Southern States.

* 320 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the recommendations made at the Conference of Transport Ministers of Southern States held in December 1972 at Coimbatore?

தென் மாநில போக்கு வரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட பரிவுரைகள்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூரில் 1972 டிசம்பரில் நடைபெற்ற தென் மாநில போக்கு வரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர்கள் செய்த பரிவுரை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மேலவை முன் விவர அறிக்கை யொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, இந்தப் பரிவுரைகளை நமது சர்க்கார் முழுவதும் ஏற்றுக்கொண்டதா? அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால், அந்தப் பரிவுரைகள் மேல் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விவரங்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தப் பரிந்துரைகள் நான்கு மாநிலங்களின் அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் ஆகும். அவைகளுடைய நடைமுறைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று தென்னகத்தைச் சேர்ந்த நான்கு மாநிலங்களும் சேர்ந்து ஒரு போக்குவரத்து ஆணைக் குழு அமைத்து அவர்கள் கண்காணித்து வருகிறார்கள். நாளாவட்டத்தில் அவைகள் நிறைவேறும்.

@ 117-122 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஏப்ரல் 11

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு அவரது 69-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துக்கள்.

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று ஒரு மகிழ்ச்சியான தினம். தங்களுக்கு 69-வது பிறந்த தினம்.

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of order. Yesterday I wanted your leave to move a non-official resolution to felicitate you on your birthday today. No reply was given to me. Now the hon. the Leader of the Opposition is moving and I have no objection. I request the Leader of the Opposition to move the same on behalf of all of us.

THIRU K. RAJARAM : Not only on my behalf but on behalf of my hon. Friend Thiru Vasantha Pai also, I am felicitating the Hon. Chairman.

THIRU G. VASANTHA PAI : The hon. the Leader of the Opposition may move it on behalf of the House.

THIRU K. RAJARAM : For this I have already got the consent of my hon. Friend Thiru Vasantha Pai also in the Chamber of the Hon. Chairman.

ஆகவே தங்களுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு தங்களுக்கு எங்களுடைய வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதில் இந்தச் சபையில் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு போட்டி போட்டுக்கொள்கிறோம் என்பதை நீங்களே நேரில் அறிந்து கொண்டீர்கள். நாங்கள் உங்களை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். நீங்கள் எங்கள் எல்லோரையும் விட மூத்தவர் என்பதால் தான் வாழ்த்துகிறோம் என்ற வார்த்தையைச் சொல்லவில்லை ; எங்களுடைய வணக்கத்தையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். தங்களைப் போன்ற ஒருவர் தலைவராக இருந்து அவையை நடத்துவது என்பது எங்களுக்கு மிகச் சந்தோஷத்தையும் பெருமையையும் கொடுக்கிறது. ஏனென்றால் இந்தியாவில் பல சபைகளில் நடப்பதைப்